




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்









Vol: 02 | Issue: 344 | 4 Pages | 10.7.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 344 | 4 பக்கங்கள் | 10.7.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு**

**விளக்கம்:**
உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

## காதல் இனித்தது...கல்யாணம் என்றால் கசப்பா? காதலன் செய்த கொடூர செயல்



திருப்பதி, ஜூலை 10

ஆந்திர மாநிலம், விஜய நகரம், கஜராயுனி வலசாவை சேர்ந்தவர் சீனிவாஸ். இவர் குடும்பத்தினருடன் ஐதராபாத் புறநகர் பகுதியான ராமச்சந்திராபுரத்தில் வசித்து வருகிறார்.

இவருடைய மகள் ரம்யா (வயது 23). இவர் அங்குள்ள தனியார் கல்லூரியில் இறுதி ஆண்டு பட்டப் படிப்பு படித்து வந்தார். வேல் துருத்தி மன்னேப் பள்ளியை சேர்ந்த பிரவீன் குமார் (25). பி.டெக் பட்டப்படிப்பு முடித்த இவர் அப்பகுதி மாணவர்களுக்கு டியூஷன் நடத்தி வந்தார். அப்போது ரம்யாவுடன் பழக்கம் ஏற்பட்டது. இருவரும் கடந்த 3 ஆண்டுகளாக காதலித்து வந்தனர். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ரம்யாவின் வீட்டிற்கு சென்ற பிரவீன்குமார் தங்களின் காதல் விவகாரம் குறித்து அவரது பெற்றோரிடம் தெரிவித்தார். அதற்கு ரம்யாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்து மாப்பிள்ளை தேடி வந்தனர். இந்த நிலையில் நேற்று ரம்யாவின் வீட்டில்

பெற்றோர் இல்லை என்பதை அறிந்த பிரவீன் குமார் அவரது வீட்டுக்கு சென்றார். அப்போது நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வோம் என வற்புறுத்தினார். அதற்கு ரம்யா படிப்பு முடிந்த பிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என தெரிவித்தார். திருமணம் சம்பந்தமாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த பிரவீன் குமார் தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து ரம்யாவின் கழுத்தை அறுத்து தலையை துண்டித்தார். இதில் ரம்யா ரத்த வெள்ளத்தில் துடித்து துடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

பின்னர் பிரவீன் குமார் அதே கத்தியால் தனது கழுத்தை கொண்டார். அங்கிருந்தவர்கள் பிரவீன் குமாரை மீட்டு சிகிச்சைக்காக தனியார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ராமச்சந்திராபுரம் போலீசார் மாணவின் உடலை மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். 3 வருட காதல் இனித்தது. கல்யாணம் என்று வரும்போது கசத்ததா என்று காதலன் இதுபோன்ற ஒரு கொடூர செயலில் ஈடுபட்டதாக போலீசார் தரப்பில் கூறப்படுகிறது.

## கடலூர் கோர விபத்துக்கு கலெக்டரே காரணம்: தெற்கு ரெயில்வே குற்றச்சாட்டு

THE SOUTHERN
SR
SERVES THE SOUTH
தெற்கு ரெயில்வே

கடலூர், ஜூலை 10

கடலூரில் செம்மங்குப்பம் அருகே கடலூர்ஆலப்பாக்கம் இடையே பள்ளி வேன் ஒன்று குழந்தைகளை ஏற்றி கொண்டு இன்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, வழியில் ரெயில்வே கேட் ஒன்று இருந்தது. அதன் வழியே அந்த பள்ளி வேன் கடந்து செல்ல முயன்றது.

இந்நிலையில், பள்ளி வேன் சென்றபோது, அந்த பகுதியின் வழியே விழுப்புரத்தில் இருந்து மயிலாடுதுறை நோக்கி ரெயில் சென்றது. அது பள்ளி வேன் மீது மோதி கோர விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில், வேன் பல மீட்டர் தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டது. இதில் வேனில் இருந்த குழந்தைகள் தூக்கி வீசப்பட்டனர். இந்த விபத்தில் பள்ளி மாணவ மாணவிகள் 3 பேர் பலியாகி உள்ளனர்.

இதுபற்றி தகவல் அறிந்து, அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி சென்று அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். போலீசாருக்கும், ஆம்புலன்சுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. வேன் ஓட்டுநர் மற்றும் பள்ளி குழந்தைகள் பலர் காயம் அடைந்து உள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், விபத்துபற்றி தெற்கு ரெயில்வே வெளியிட்டு உள்ள அறிவிப்பில், ரெயில்வேயின் முழு நிதியுதவியுடன் இந்த லெவல் கிராசிங்கிற்கு சுரங்க பாதை (அடிச்சாலை) அமைக்க தெற்கு ரெயில்வே முன்பே ஒப்புதல் அளித்து விட்டது. ஆனால், கடந்த ஓராண்டாக இதற்கு கடலூர் மாவட்ட கலெக்டர் அனுமதி அளிக்கவில்லை என தெரிவித்து உள்ளது.

இந்ததுரதிர்ஷ்டசம்பவத்தில், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்த நபர்களுக்காக ரெயில்வே ஆழ்ந்த வருத்தம் தெரிவித்து கொள்வதுடன், இதற்காக மன்னிப்பும் கோருகிறது என தெரிவித்து உள்ளது.

# கல்வியே மாணவர்களின் நிலையான சொத்து.. காந்தி, பெரியார் வழியில் மாணவர்கள் செல்ல வேண்டும்: முதலமைச்சர் அறிவுரை

திருச்சி, ஜூலை 10

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பயணம் மேற்கொண்டு, அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் களஆய்வு மேற்கொண்டு வருகிறார். அதன்படி, 2 நாள் பயணமாக இன்று திருவாரூருக்கு செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மாலையில் ரோடு ஷோ மேற்கொள்கிறார். அந்தவகையில் சென்னையிலிருந்து இன்று காலை விமானம் மூலம் திருச்சி சென்ற அவர், அங்குள்ள ஜமால் முகமது கல்லூரி பவள விழாவில் கலந்துகொண்டு புதிய கட்டிடத்தை திறந்துவைத்தார். பவளவிழா ஆண்டின் தொடக்க விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாணவர்களுடன் உரையாற்றினார். அப்போது பேசிய அவர்;

முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதில்இருந்துதொடர்ந்து அரசின் பல ஆய்வு கூட்டங்களில் பங்கேற்கிறேன். பல இடங்களுக்கு பயணம்செய்து ஆய்வுக்கூட்டங்களை நடத்தி வருகிறேன். கடந்த மே மாதத்தில் இஸ்லாமிய தமிழிலக்கிய மாநாட்டில் கலந்து கொண்டேன். ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக ஜமால் முகமது கல்லூரி இருக்கிறது. கல்லூரி நட்பு ஆயுட்காலம் வரை இருக்க வேண்டும் என்றார்.

கோட்சே கூட்டத்துக்கு பின் மாணவர்கள் செல்லக்கூடாது: முதலமைச்சர்மா ணவர்கள் ஒருபோதும் கோட்சே கூட்டத்துக்கு பின்னால் சென்றுவிடக்கூடாது. காந்தி வழி, அம்பேத்கர் வழி என நமக்கு பல வழி இருக்கிறது; மாணவர்கள் தவறான வழியில் செல்லக் கூடாது. இளம் மாணவர்களை சந்திக்கும்போது ஒவ்வொருமுறையும் உற்சாகம் அடைகிறேன்.

கல்வியே மாணவர்களின் நிலையான சொத்து: முதல்வர் மு.க.ஸ்டாலின்மா ணவர்களுக்கு படிப்பு மிகவும் முக்கியம்; அதுதான் உங்களுக்கு நிலையான சொத்து. 2011, 2016ல் ஜமால் முகமது



கல்லூரிக்கு யுசிஜி கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.3 கோடி நிதி கொடுத்தது. ஜமால் முகமது கல்லூரியில் படித்த 2 பேர் இன்று மூத்த அமைச்சர்களாக உள்ளனர்

ஓரணியில் நின்றால் தமிழ்நாட்டை வீழ்த்த முடியாது: முதலமைச்சர்

ஓரணியில் தமிழ்நாடு நின்றால் தமிழ்நாட்டை யாராலும் வீழ்த்த முடியாது.நான்அரசியல்பேசவில்லை மாணவர்களுக்கு அரசியல் புரிய வேண்டும் என்பதற்காக பேசுகிறேன். தகைசால் தமிழராக காதர் மொகிதீன் உயர்ந்து நிற்கிறார். காதர் மொகிதீனுக்கு தகைசால் விருது தருவதில் பெருமை அடைகிறேன்.

கல்விக்குபொருளாதாரம்தடையாக இருக்கக் கூடாது: முதல்வர் மு.க.ஸ்டாலின்

கல்விக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுத்து ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். கல்விக்கு பொருளாதாரம் தடையாக இருக்கக் கூடாது என்பதால் மாணவர்கள், மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்குகிறோம். எப்போதும் இளைஞர்களுக்கு திமுக அரசு துணையாக நிற்கும்.

இஸ்லாமியர்களின் உரிமையை காக்கும் இயக்கமாக என்றும் திமுக இருக்கும். 20லட்சம்மாணவர்களுக்கு விரைவில் லேப்டாப் வழங்க உள்ளோம். சமூக நீதி போராட்டத்தின் பலம்தான் இன்று நாம் பார்க்கும் தமிழ்நாடு. தமிழ்நாட்டின் நலனை காக்க மாணவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்று திரள வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

# இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டம்: இயல் இசை நாடக மன்றம் அறிவிப்பு

சென்னை

இளம்கலைஞர்களைஊக்குவிக்கதமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தகுதிவாய்ந்த இளம் கலைஞர்களுக்கு கலை நிறுவனங்களில் வாயிலாக கலைநிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கும் திட்டத்தின் கீழ், இளம் கலைஞர்களை தெரிவு செய்து அவர்களுக்கு தமிழகத்தில் சிறப்புடன் செயல்படும் கலை நிறுவனங்களில் வாயிலாக தலா மூன்று கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இந்த கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடத்த கலை நிறுவனங்களுக்கு நிதியுதவியும், கலைஞர்களுக்கு மதிப்பூதியமும் தமிழ்நாடு இயல்இசைநாடகமன்றத்தால்வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் பெயர் பட்டியல்:

குரலிசை கலைஞர்கள்: பா.ஹரிப்பிரியா – மதுரை, கி.மீரா – கோவை, பி.மதுஸ்ரீ மதுரை, ப்ரீத்தி சேதுராமன் – சென்னை, சமன்விதா ஜி.சாசிதரன் – சென்னை, வி.லாவண்யா – சென்னை, எஸ்.ஸ்வராத்மிகா – சென்னை, நந்திதாகண்ணன்–சென்னை, வெ.கன்யாகுமரி





– கோவை, வி.கிருஷ்ண சாய் – வி.முகுந்த சாய் – சென்னை

தனி வயலின் கலைஞர்கள்: முகுந்தன் சாம்ராஜ் – மயிலாடுதுறை – ஆர்.ஸ்ரீ கிருதி – சென்னை

சாக்ஸபோன்கலைஞர்:டி.ஜி.என்.திருவருள் சென்னை

கதாகலட்சேபம் கலைஞர்: ஹ.அனன்யா – சென்னை

நாதஸ்வரம் கலைஞர்கள்: ஷி.கேசவராஜ் – காஞ்சிபுரம், நி.உதயகுமார் – திருவள்ளூர்

பக்கவாத்தியம்: மா.கோகுல கிருஷ்ணன் – திருவாரூர்

மிருதங்க கலைஞர்கள்: ச.முத்துகுமரன் – மதுரை, ஹ.அபினவ் சங்கர் – மதுரை, எஸ். விக்னேஷ் – மதுரை, ஐஸ்வர்யா – சென்னை, அநிருத். ஸ்ரீ – சென்னை, ஆர்.லட்சுமண் – சென்னை, கி.சாய் பிரசாத் – சென்னை, ராம்ஸ்மரண் கிருஷ்ணகுமார் – சென்னை, என். ராமகிருஷ்ணன் – சென்னை, சஞ்சய் வேதாந்த் – சென்னை

கஞ்சிராகலைஞர்:வி.முகுந்தசாய்–சென்னை

கடம் கலைஞர்: தி.ஆனந்த்மகராஜ் – சென்னை

பரதநாட்டிய கலைஞர்கள்: கீர்த்தனா சுப்பிரமணியன் – சென்னை, ஆ. சூர்யகலாகிருஷ்ணகிரி, வைஷ்ணவி ஸ்ரீநிவாசன் – சென்னை, கோ.ஜாஹ்னவி – சென்னை, ம.அஷயா ஸ்ரீலலிதாசென்னை, மானாசா ஸ்ரீராம் சென்னை, வைஷாலி சென்னை, சஹானா சுகுமார் – சென்னை, ஆர். வனமாலிகா – சென்னை, ஹேமாவதி கலையரசன்–சென்னை, சாத்விகாகோபிநாதன் – சென்னை, எஸ்.மவுமிதா – சென்னை, ஷித்திகா பி.நாயர் – சென்னை

கிராமியக் கலைஞர்கள்: எம்.சங்கீத் ஸ்ரீராம் (பொம்மலாட்டம்)–தஞ்சாவூர், கு.ஜெயபிரசாத் (ஒயிலாட்டம்) – மதுரை, பா.கணபதி (ஒயிலாட்டம்) – மதுரை, வெ.விக்னேஷ் (கைசிலம்பம்) – திருப்பத்தூர் சு.பிரபு (கைசிலம்பம்) – திருப்பத்தூர், சு.வி.ரமணன் (கரகம்) சென்னை.

# பொது வேலைநிறுத்தத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்கள் பங்கேற்கவில்லை: 99 சதவீதம் பேர் பணிக்கு வந்திருந்தனர்

சென்னை, ஜூலை 10

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள நான்கு சட்ட தொகுப்புகளை திரும்பப்பெற வலியுறுத்தியும், பொதுத்துறை பங்குகளை விற்காதே என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் நேற்று பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. இந்த வேலைநிறுத்த போராட்டத்தில் தமிழகத்தில் சிஐடியு, தொமுச, ஜாக்டோஜியோ உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் பங்கேற்பதாக அறிவித்திருந்தன. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றால் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்று தமிழக தலைமை செயலாளர் முருகானந்தம் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து, தமிழக தலைமை செயலாளர் முருகானந்தம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், “பொது



வேலைநிறுத்தத்தில் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பங்கேற்க கூடாது. மீறி பங்கேற்றால் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையுடன், நோ வொர்க், நோ பே என்ற அடிப்படையில் சம்பளம் வழங்கப்படாது” என்றும் தெரிவித்திருக்கிறார்.

அதன்படி, சென்னை தலைமை செயலகம், எழிலகம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு பள்ளிகளில் 98 முதல் 99 சதவீதம் பேர் நேற்று பணிக்கு வந்திருந்தனர். ஒரு சிலர் உடல்நிலை சரியில்லாமல் மற்றும் ஏற்கனவே விடுப்பில் இருந்தவர்கள் மட்டும் பணிக்கு வரவில்லை. அரசு அலுவலக ங்களில் எந்த தடையு ம் இல்லாமல் பணிகள் நடைபெற்ற தாக மனிதவள மேலா ண்மை துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.






# திருவள்ளூரில் ஆள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட 5 பேரை 2 காவலில் எடுத்து சிபிசிஐடி விசாரணை

திருவள்ளூர், ஜூலை 10

திருவள்ளூரில் ஆள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட 5 பேரை 2 காவலில் எடுத்து சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். கைதானவர்கள், ஜெகன்மூர்த்தி,





ஏடிஜிபி ஜெயராமன் இடையே தொடர்பு உள்ளதா என விசாரணை நடைபெற்றுவருகிறது. ஆள்கடத்தில் வழக்கில் வனராஜா, மணிகண்டன், கணேசன், மகேஸ்வரி, சரத்குமார் ஆகியோரிடம் விசாரணை நடைபெறுகிறது.

## திருநெல்வேலி மாவட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த கருத்தரங்கு

திருநெல்வேலி, ஜூலை 10

திருநெல்வேலி மாவட்டம், வண்ணார்பேட்டை ஹோட்டல் ஆப்பிள் ட்ரீயில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த கருத்தரங்கினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட கலெக்டர் இரா.சுகுமார், தலைமையில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர்கோ.ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்கள்.



இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து அவர்களின் இன்னல்களை போக்கும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் பெண்களுக்கு முக்கியத்தும் கொடுத்து பெண்கள் அரசுத்துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், தனியார் நிறுவனங்களில் முக்கியத்தும் வழங்கி சிறந்து விளங்கி வருகிறார்கள். அவர்களின் நல்வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து பெண்கள் உயர்கல்வி கற்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் ஏழைகள், நலிவடைந்த பெண்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவரின் நலனை எப்போதும் உறுதி செய்து வருவதோடு, பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பெருமளவில் பயனடையும் வகையில், திருமண நிதி உதவித் திட்டம், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், அரசு சேவை இல்லங்கள் மற்றும் பணிபுரியும் மகளிர்களுக்கு தோழி விடுதிகள் போன்ற திட்டங்கள் மூலம் அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சமூகநலத்துறையின் மூலமாக திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு சமூகநலத்துறை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், காவல்துறை போன்ற தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு முதல் 11.07.2025 ஆகிய மூன்று நாட்களில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்கள் கருத்துரையாற்றவுள்ளார்கள்.

இக்கருத்துக்களை பெற்று தாங்கள் பயனடைவதுடன் கருத்துகளை பிற பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்கள்.

## நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்: கலெக்டர் தகவல்

திண்டுக்கல், ஜூலை 10

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் செ.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, அணைப்பட்டி வீர ஆஞ்சநேயர் கோவிலில் பொது நிதியிலிருந்து ரூ.9.65 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பெண்கள் உடை மாற்றும் அறை கட்டுமான பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மேலும், அணைப்பட்டி வீர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்வச் பாரத் மிஷன் கிராமீன் திட்டத்தின்கீழ் தலா ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு கழிப்பறை அறை கட்டுமான பணிகளை மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், வீர ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள வைகை ஆற்றின் ஓரங்களில் செடி, கொடிகள் மற்றும் அப்பகுதியில் உள்ள கழிவுகளை அகற்றி சுகாதாரமாக பராமரிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, ஆணைப்பட்டி நாச்சிகுளம் செம்பட்டி பிரிவு ரோடு முதல் வைகை ஆறு ரோடு வரை முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் () ரூ.60.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை மேம்பாட்டு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, சித்தர்கள் நத்தம் ஊராட்சி, விளாம்பட்டியில் 132 நபர்களுக்கு பட்டா வழங்க ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதி பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட கலெக்டர் கேட்டறிந்தார்.

விளாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.34.23 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுமான பணிகளை மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கீழ் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் அங்கன்வாடி மையம் கட்டுமான பணிகளை ஆய்வு மேற்கொண்டார். அதனை தொடர்ந்து, விளாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பொது நிதியின் கீழ் ரூ.2.08 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகள் மற்றும் வர்ணம் பூசும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை, பொருட்களின் இருப்பு மற்றும் தரம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஜம்புதுரைக்கோட்டை ஊராட்சி உட்கடை கிராமம் தொப்பிநாயக்கன்பட்டியில் 49 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

## கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலக குறள் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சி

கன்னியாகுமரி, ஜூலை 10

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலக குறள் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளுக் கான கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீன தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், தொழில் முனைவோர்கள், பொதுமக்கள் உள்ளிட்டவர்களின் தேவைகளை அறிந்து அவர்களின் கனவுகள் மெய்ப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் கனவுகள் மெய்ப்பட திட்டத்தினை செயல்படுத்தி அவர்களின் கனவுகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கனவுகள் மெய்ப்பட திட்டத்தின்கீழ் மாதந்தோறும் 15 நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு துறையின் வாயிலாக கனவுகள் மெய்ப்படும் கன்னியாகுமரி என்ற சிறப்பு முன்னெடுப்பின் வழி, பல தரப்பு மக்களிடம் கலந்துரையாடி அவர்களது தேவைகளை அறிந்து, தகுதியான நபர்கள் அனைவரும் அரசு திட்டங்களின் மூலம் பயன்பெற ஏதுவாக அரசு வழங்கும் பலநலத்திட்டங்களை எடுத்துரைத்து, அவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கி, அவர்களது கனவுகளை நிறைவேற்றி வருகிறது.

அதன்ஒருபகுதியான இன்று மாற்றுத்திறனாளிகளின் நிலையான வாழ்வாதாரதிற்காக, தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் பூ கட்டுதல் மற்றும் கைவினை பொருட்கள் பயிற்சிபெற விருப்பம் தெரிவித்த 30 மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தார் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடப்பட்டது. நமது மாவட்டத்தில் தயார் செய்யப்படும் மாணிக்கமாலையானது புவிசார் குறியீடு பெற்றுள்ளது. இம்மாணிக்கமாலையானது திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில், போன்ற சிறப்பு மிக்க கோவில்களிலும், திருமணம், வரவேற்பு, போன்றவற்றிலும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், கனவுகள் மெய்ப்பட கன்னியாகுமரி திட்டத்தில் கண்டறியபட்டுள்ள 30 மாற்றுத்திறனாளிகள்/ மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர் அடங்கிய குழுவிற்கு மாணிக்கமாலை தொடுத்தல், சானிடரி நாப்கின் தயாரிக்கும் பயிற்சி, போன்ற பலவகை பயிற்சிகளுக்கும், ஆடு மாடு கோழி வளர்ப்பிற்கு வங்கி கடன் வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதோடு, அத்திட்டங்களில் இணைந்து பயனடைவதற்கான வழிகாட்டுதல் வழங்கப்பட்டது.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டதோடு, அவர்களின் தொழில் ஈடுபாடுகள் குறித்தும் கேட்டறியப்பட்டது. அவர்களில் மிகுந்த தேவையுள்ள 3 மாற்றுத்திறனாளி பெண்களுக்கு 3 தையல் இயந்திரம் உடனடியாக வழங்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீன தெரிவித்தார்கள்.

தொடர்ந்து தையல் இயந்திரம் உடனடியாக கிடைக்கப்பெற்றதன் வாயிலாக தங்களது கனவுகள் மெய்ப்பட்டதாக தமிழ்நாடு முதலமைச்சர்க்கும், மாவட்ட கலெக்டருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், பவித்ரா, துறை அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், அரியாங்கோட்டை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாம்

இராமநாதபுரம், ஜூலை 10

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம், அரியாங்கோட்டை கிராமத்தில் வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் மக்கள் தொடர்புத்திட்ட முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு தலைமையேற்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று 45 பயனாளிகளுக்கு ரூ.9.12 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

மக்கள் மாவட்ட நிர்வாகத்தை தேடி வந்த நிலை மாறி மாவட்ட நிர்வாகமே மக்களைத் தேடி முகாமிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க அரசு உத்தரவிட்டு ஒவ்வொரு மாதமும் தேர்வு செய்யப்பட்ட கிராமங்கள் தோறும் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், அரியாங்கோட்டை கிராமத்தை தேர்வு செய்து சுற்று வட்டாரத்தில் உள்ள கிராம மக்களிடம் கோரிக்கைகள் குறித்து 112 மனுக்கள் பெறப்பட்டு அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திடும் வகையில் தற்பொழுது 45 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதேபோல் இன்று 96 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்களின் மனுக்களுக்கு தீர்வு கிடைக்கச் செய்வது. அதேபோல் அரசின் நலத்திட்டங்கள் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் சென்றடையச் செய்வது என்பதேயாகும். அந்த வகையில் இம்முகாமில் மாவட்ட நிர்வாகத்தில் உள்ள அனைத்துத்துறை தலைமை அலுவலர்கள் மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க இருப்பதுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி செயல்பட உத்தரவிட்டுள்ளார்கள். பொதுமக்களாகிய நீங்கள் தங்கள் பகுதியில் முகாம்கள் நடைபெறும் பொழுது தவறாமல் கலந்து கொண்டு உங்கள் ஊராட்சியின் வளர்ச்சிக்கும் உங்கள் வளர்ச்சிக்கும் தேவையான திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்தார்.

அதனைத்தொடாந்து மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு இலவச தையல் இயந்திரம் ரூ.6,690 மதிப்பீட்டிலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு ஈமச்சடங்கு நிவாரணத்தொகை ரூ.17,000 மதிப்பீட்டிலும் மற்றும் 01 பயனாளிக்கு நலவாரிய கல்வி உதவித் தொகை ரூ.3,000 மதிப்பீட்டிலும் என மொத்தம் 02 பயனாளிகளுக்கு ரூ.20,000 மதிப்பீட்டிலும், கூட்டுறவுத்துறையின் மூலம் 13 பயனாளிகளுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கடன் ரூ.8,73,600 மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறையின் மூலம் 01 பயனாளிக்கு முயுஏஜயுனு ரூ.2,075 மதிப்பீட்டிலும்இ 10 பயனாளிகளுக்கு ரூ.5,080 மதிப்பீட்டிலும், 05 பயனாளிகளுக்கு ரூ.2,705 மதிப்பீட்டிலும், 05 பயனாளிகளுக்கு முயுஏஜயுனு ரூ.2,250 மதிப்பீட்டிலும், 02 பயனாளிகளுக்கு குளுசுஊந ரூ.290 மதிப்பீட்டிலும் என மொத்தம் 23 பயனாளி களுக்கு ரூ.8,86,000 மதிப்பீட்டிலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் 06 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் என மொத்தம் 45 பயனாளிகளுக்கு ரூ.9,12,690 மதிப்பீட்டில் அரசு நலத் திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு வழங்கினார்.

தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் வருவாய்த்துறை, சமூகநலத் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, குழந்தைகள் பாதுகாப்பு நலத்துறை, மகளிர் திட்டம், பொதுசுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆகிய துறைகள் அரசின் திட்டங்கள் குறித்த சாதனை விளக்க கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டதுடன், பொதுமக்களும் அந்த அரங்குகளை பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு தேவைகேற்ப திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டுமென மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

நடைபெறும் பொழுது தவறாமல் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகள் குறித்து விண்ணப்பித்து பயன்பெற வேண்டுமென மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்தார்.

## கரூர் மாநகராட்சி திருநகர் பகுதியில் செயல்பட்டு வரும் தளிர் மகளிர் சுய உதவிக்குழுவின் பேப்பர் பை தயாரிக்கும் கூடம்: துணை முதல்வர் நேரில் ஆய்வு

கரூர், ஜூலை 10

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கரூர் மாநகராட்சி திருநகர் பகுதியில் செயல்பட்டு வரும் தளிர் மகளிர் சுய உதவிக்குழுவின் பேப்பர் பை தயாரிக்கும் கூடத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு குழுவின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார சுதந்திரம் காண வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் 1989 ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களை ஆரம்பித்தார்.

அதனைத் தொடர்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சி துறையின் அமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்தபோது மாவட்டந்தோறும் சென்று லட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கணக்கு புத்தகம் தொடங்கி வைத்து, பொருளாதார கடன், சுழல் நிதி கடன் உள்ளிட்டவற்றை வழங்கி பெண்கள், வங்கிகளுக்கு தன்னம்பிக்கையுடன் சென்று தாங்களே வங்கிப்பணிகளை மேற்கொள்ளும் நிலைக்கு உயர்த்தினார்.

கரூர் மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் 41,275 மகளிரைக் கொண்டு 3,175 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 32,941 குழுக்களைச் சேர்ந்த 3,95,292 உறுப்பினர்களுக்கு 1,777.34 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாநகராட்சி திருநகர் பகுதியில் 12 மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு 10.12.2021 முதல் தளிர் மகளிர் சுய உதவிக்குழுவினர் செயல்பட்டு வருகின்றார்கள். இவர்களுக்கு கரூர் நகர கூட்டுறவு வங்கியில் வங்கிக்கடன் இணைப்பு பெற்று தந்து, சுய உதவிக்குழு உறுப்பினர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, பேப்பர் பை தயாரிக்கும் பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி ஆகிய பயிற்சிகளும் மகளிர் திட்டத்துறையின் மூலம் அளிக்கப்பட்டுள்ளன.

தளிர் மகளிர் சுய உதவிக் குழுவின் வங்கி வரவு, செலவு, கடன் பெறுதல், திரும்ப செலுத்துதல், உறுப்பினர்களுக்கு உள்கடன் அளித்தல் உள்ளிட்ட குழுவின் செயல்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடினார்.

## ஈரோடு மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் முகாம்: அமைச்சர் நேரில் ஆய்வு

ஈரோடு, ஜூலை 10

தமிழ்நாடு முதலமைச்சர் 2025ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார். முதலமைச்சர் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டம் 15.7.2025 அன்று தொடங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் மாநகராட்சியில் 40 முகாம்கள், நகராட்சியில் 41 முகாம்கள், பேரூராட்சியில் 84 முகாம்கள் மற்றும் ஊராட்சிகளில் 175 முகாம்கள் என மொத்தம் 340 முகாம்கள் நடைபெற உள்ளது. 15.07.2025 முதல் 14.08.2025 வரை மாநகராட்சியில் 15 முகாம்கள், நகராட்சியில் 15 முகாம்கள், பேரூராட்சியில் 30 முகாம்கள் மற்றும் ஊராட்சியில் 54 முகாம்கள் என மொத்தம் 114 முகாம்கள் நடைபெற உள்ளது. இந்த முகாம்களுக்கு வருகை தரும் பொது மக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் முகாம்கள் 15.7.2025 அன்று தொடங்கப்பட்டு நவம்பர் மாதம் வரை அனைத்து வட்டங்களிலும் நடைபெறும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 15.7.2025 அன்று ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, பவானி மெயின் ரோடு, பிளாட்டினம் மஹால், பவானி நகராட்சி, வன்னியர் திருமண மண்டபம், அரச்சலூர் பேரூராட்சி, ஓடாநிலை, சமுதாயக்கூடம், கிளாம்பாடி பேரூராட்சி, கருமாண்டாம்பாளையம் கொங்கு திருமண மண்டபம், அம்மாபேட்டை வட்டாரம், பட்லூர் ஊராட்சி, பொம்மன்பட்டி சமுதாய கூடம் மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டாரம், மொடச்சூர் ஊராட்சி, வேட்டைக்காரன் கோவில் ஸ்ரீ வாசு சென்னியப்பா திருமண மண்டபம் ஆகிய இடங்களில் முகாம்கள் நடைபெற உள்ளது.



ஈரோடு மாவட்டத்தில் சுமார் 1,117 தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள், சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்கி வருகின்றார்கள்.

# நெல்லை: வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியை கொன்று 14 பவுன் நகை கொள்ளை

நெல்லை, ஜூலை 10

நெல்லை மாவட்டம் வள்ளியூர் மின்வாரிய குடியிருப்பு காலனி பகுதியைச் சேர்ந்தவர் அர்ஜூனன் (வயது 78). இவர் மின்வாரியத்தில் என்ஜினீயராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது மனைவி ருக்மணி (71). இவர்களுக்கு பாலசுந்தர், செந்தில் முருகன் ஆகிய 2 மகன்களும், சண்முகசுந்தரி என்ற மகளும் உள்ளனர். பாலசுந்தர் காவல்கிணறு மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் பணியாற்றி வருகிறார். தனது பெற்றோர் வீட்டின் அருகில் உள்ள மற்றொரு வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். செந்தில்முருகன், சண்முகசுந்தரி ஆகியோர் வெளியூர்களில்வசித்துவருகிறார்கள்.



கடந்த சில மாதங்களுக்கு முன் அர்ஜூனன் இறந்துவிட்டதால் ருக்மணி மட்டும் வீட்டில் தனியாக வசித்து வந்தார். அவருக்கு நேற்று காலையில் சாப்பாடு கொடுப்பதற்காக பாலசுந்தர் சென்றார். ஆனால், முன்பக்க கதவு பூட்டப்பட்டு இருந்தது. தனதுதாயார்பெயரை கூறி அழைத்தும் அவர் வெளியே வரவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த பாலசுந்தர் வீட்டின் பின்புறம் சென்றார். அங்கு பின்கதவு திறந்து கிடந்தது.

உள்ளே சென்றபோது அங்கு ருக்மணி தலையில் ரத்தக்காயங்களுடன் பிணமாக கிடந்தார். அவரது கழுத்தில் கிடந்த 7 பவுன் தங்க சங்கிலி மற்றும் கையில் அணிந்திருந்த 7 பவுன் வளையல் என 14 பவுன்நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். வீட்டில் பீரோ லாக்கரில் இருந்த நகைகள் தப்பின. இதுகுறித்து வள்ளியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபர்களை வலைவீசி தேடி வருகிறார்கள்.

# தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பாக குற்றாலம் சாரல் விழா

தென்காசி, ஜூலை 10

தென்காசி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்தப்படும் 2025 ஆம் ஆண்டிற்கான சாரல் திருவிழா 19.07.2025 அன்று முதல் தொடங்கப்பட விருப்பதையடுத்து சாரல் விழிப்புணர்வு மாராத்தான் 15.07.2025 அன்று காலை 6.30 மணிக்கு தென்காசி, குத்துக்கல்வலசை ஐ.டி கார்னர் வாழைக்காய் மண்டியிலிருந்து துவங்கப்பட உள்ளது. இம்மாராத்தான்

போட்டியில் அனைத்து வயதுப்பிரிவு ஆண், பெண் என இருபாலரும் கலந்து கொள்ளலாம். ஆண்களுக்கு 10 கி.மீ தூரமும், பெண்களுக்கு 5 கி.மீ தூரமும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மாராத்தான் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதற்பரிசாக ரூ.5,000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/ மும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/ மும், சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன. போட்டியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் முன்பதிவு செய்திட கடைசி நாள்.14.07.2025 ஆகும். மாராத்தான் போட்டிக்கு முன்பதிவு செய்திட 74489 97877 (ம) 04633212580 என்ற அலைபேசி எண்ணிலோ (அ) மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை நேரிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தில் பிக்பாக்கெட் அடித்த நபர் கைது

கோயம்புத்தூர் ஜூலை 10

தமிழக சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சிகள் முழு வீச்சில் தயாராகி வருகின்றன. அந்த வகையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். சட்டசபை தொகுதி வாரியாக "மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.



கோவையில் கடந்த 7ம் தேதி சுற்றுப்பயணத்தை தொடங்கிய எடப்பாடி பழனிசாமி பல்வேறு பகுதிகளுக்கு சென்று மக்களிடம் ஆதரவை திரட்டி வருகிறார். இந்த சுற்றுப்பயணத்தின்போது ஆயிரக்கணக்கான மக்கள், அதிமுகதொண்டர்கள்திரண்டு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அப்போது ஏற்படும் கூட்ட நெரிசலை பயன்படுத்திபிக்பாக்கெட் அடிக்கும் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இந்நிலையில், கோவை மணிக்கூண்டு பகுதியில் எடப்பாடி பழனிசாமியை வரவேற்க காத்திருந்த அதிமுக அம்மா பேரவை நிர்வாகி சம்பத் உள்பட 3 பேரிடம் பிக்பாக்கெட் அடிக்கப்பட்டுள்ளது. பிக்பாக்கெட் அடித்த நபரை போலீசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரின் பெயர் உள்ளிட்ட விவரம் இதுவரை வெளியாகவில்லை.

# அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் சார்பில் வேலூர் மற்றும் குடியாத்தத்தில் சாலை மறியல் போராட்டம்

ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விராத தொழிலாளர் விரோத விவசாய விரோத கொள்கைகளை கண்டித்து அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் சார்பில் நாடு தழுவிய அளவில் நடைபெறும் பொது வேலை நிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தின் ஒரு பகுதியாக



வேலூர்தலைமை அஞ்சலகம் முன்பு சிஐடியு எஸ்.பரசுராமன்,தொமுச எஸ்.மணி, ஏஐடியுசி கே.கோவிந்தராஜ் ஐஎன்டியுசி கே. முகமது அலி ஜின்னா எச்எம்எஸ் கா.வெ.திருப்பதி, ஏஐசிசிடியு எஸ்ஏ .சிம்பு தேவன் ஆகியோர் தலைமையில்மறியல்போராட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 1400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். சுமார் 350 பெண்கள் உட்பட 1100பேர் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

இதே போன்று குடியாத்தம் பேருந்து நிலையம் முன்பு சிஐடியு சி.சரவணன் தொமுச வெ. கலைநேசன், ஏஐடியுசி மூர்த்தி ஆகிய தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. இதில் 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். 103 பெண்கள் உட்பட 180 பேர் கைது செய்யப்பட்டனர்.

மறியலில்பு திதாக கொண்டு வந்துள்ள தொழிலாளர் சட்டதொகுப்புகளை திரும்ப பெற வேண்டும்.மூன்று குற்றவியல் சட்டங்களை திரும்ப பெற வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் நடைமுறைபடுத்த வேண்டும். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். உணவு மருந்து வேளாண் இடுப்பு பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரியை நீக்க வேண்டும். பெட்ரோல் டீசல் கேஸ் மீதான கலால் வரியை குறைத்திட வேண்டும்.

மின்சார சட்ட மசோதா 2022 ஐ திரும்ப பெற வேண்டும். ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டத்தை கைவிட வேண்டும். புதியதேசியகல்விக் கொள்கை 2024 கைவிட வேண்டும்.

பாரம்பரிய தொழிலான பீடி, தீப்பெட்டி, கைத்தறி, ஷூ கம்பெனி தொழிலாளர்களை பாதுகாத்திட வேண்டும். பீடி மீதான 28% ஜிஎஸ்டி வதியை ரத்து செய்திட வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளைவலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்

# கடலூர் பள்ளி வேன் விபத்து: ரெயில்வே கேட் கீப்பர் மீது 5 பிரிவுகளில் வழக்கு

கடலூர் ஜூலை 10

கடலூர்செம்மங்குப்பம் அருகே பள்ளி வேன் ரெயில்வே கேட்டை கடக்க முயன்றது. அப்போது பள்ளி வேன் மீது சிதம்பரம் நோக்கி சென்ற ரெயில் மோதியது. இந்த சம்பவத்தில் 2 மாணவர்கள், ஒரு மாணவி என 3 பேர் உயிரிழந்தனர்.

பள்ளி வேன் டிரைவரும், மற்றொரு மாணவனும் படுகாயங்களுடன் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



விபத்தின்போது ரெயில்வே கேட் மூடப்படாமல் இருந்ததே விபத்துக்கு காராம் என தெரியவந்துள்ளது. ரெயில்வே கேட் கீப்பர் பங்கஜ் சர்மா பணியின்போது தூங்கியதே விபத்துக்கு காரணம் என பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக ரெயில்வெ கேட் கீப்பர் பங்கஜ் சர்மாவை ரெயில்வே சஸ்பெண்ட் செய்துள்ளது. மேலும், இந்த விபத்து தொடர்பாக பங்கஜ் சர்மாவை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள ரெயில்வே கேட் கீப்பர் பங்கஜ் சர்மா மீது 5 பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ரெயில்வே சட்டப்பிரிவுகளின்கீழ் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# நெய்வேலியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் சிறந்த எழுத்தாளர்களுக்கு மாவட்ட கலெக்டர் பரிசு

கடலூர், ஜூலை 10

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் 24ஆம் ஆண்டு நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் சிறந்த எழுத்தாளர்களுக்கு மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பரிசுகளை வழங்கினார்.

மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது,

எனக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கம் சிறு வயதில் ஏற்பட்டது. ஏனெனில் எனது தாத்தா, பாட்டி நான் எதைக் கேட்டாலும் புத்தகங்கள் வாங்கி கொடுத்து படித்து முடித்தால் மட்டுமே நான் கேட்டதை வாங்கி கொடுப்பார்கள். எனது 80 வயதுள்ள தாத்தா, பாட்டி இன்னமும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தினை தொடர்கின்றனர். பெற்றோர் என்ன செய்கின்றமோ, அதையே குழந்தைகளும் செய்வார்கள். நாம் குழந்தைகள் முன் நல்ல புத்தகங்களை




வாசிக்கும் பழக்கத்தினை தொடர்ந்தால் நமது பிள்ளைகளும் கைப்பேசியினை பார்ப்பதை நிறுத்திவிட்டு, புத்தகம் வாசிக்கும் பழக்கத்தினை தொடர்வார்கள்.

நமது மாவட்டத்தில் 200 நூலகங்கள் உள்ளது. மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கில் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் வாசிப்பினை அதிகரிக்கும் நோக்கில் புத்தக வாசிப்பு போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், கடலூர் மாவட்டத்தில் மாணவர்களின் புத்தகம் வாசிப்புத் திறனை அதிகரத்திடவும், போட்டித் தேர்வர்களுக்கு உதவிடும் வகையிலும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நூலகம் கட்ட அரசு உத்திரவிட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் துவங்க உள்ளது.

மாவட்ட நிருவாகத்தின் சார்பில் அரசு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் தங்களது கோடை விடுமுறை நாட்களை பயனுள்ளதாகவும் தங்களது திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் பொருளாதார வசதி உள்ள மாணவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு அரசு பள்ளிகளின் பயிலும் ஏழை மாணவர்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்பதற்காகவும் பிற திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் வகையிலும் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. மேலும், நெய்வேலியில் கோல்ப் பயிற்சியும் மாணவர்களுக்கு கோடை விடுமுறையில் வழங்கப்பட்டது.

மாவட்ட நிருவாகம் கல்வி சார்ந்து ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக கடலூர் மாவட்டம் கல்வித்தரத்தில் முன்னேறிய நிலையில் உள்ளது. என மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

# தென்மாவட்டங்களில் உள்ள 4 சுங்கச்சாவடிகளில் அரசு பேருந்துகளை அனுமதிக்க கூடாது ஐகோர்ட்டு

சென்னை, ஜூலை 10

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் சுங்கச் சாவடிகளுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.276 கோடியை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளதாக கூறி மதுரைகப்பலூர், சாத்தூர் எட்டூர்வட்டம், கயத்தாறு சாலைப்புதூர் மற்றும் நாங்குநேரி சுங்கச்சாவடிகளை நிர்வகிக்கும் தனியார் நிறுவனங்கள்தரப்பில்சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இந்த நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுவில், 'சுங்கச்சாவடிகளுக்கு அரசு போக்குவரத்து கழகம் செலுத்த வேண்டிய நிலுவை தொகையை விரைந்து வழங்க உத்தரவிட வேண்டும்' என கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை



விசாரித்த நீதிபதி , கப்பலூர், எட்டூர்வட்டம், சாலைப்புதூர் மற்றும் நாங்குநேரி சுங்கச்சாவடிகள் வழியாக 10ந் தேதி முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகபேருந்துகளை இயக்க அனுமதிக்கக்கூடாது.இந்த சுங்க சாவடிகளில் அசம்பாவிதங்கள் நடக்காமல் தடுக்க உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்க சம்பந்தப்பட்ட மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுக்கு டி.ஜி.பி. உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

# அடுத்தடுத்து வெடித்து சிதறிய 9 சிலிண்டர்கள்.. 42 வீடுகள் எரிந்து தரைமட்டம்.. திருப்பூரை அதிர வைத்த தீவிபத்து...

திருப்பூரில் 9 சிலிண்டர் வெடிப்பில் 42 வீடுகள் எரிந்து தரைமட்டமானது. 30 தீயணைப்பு வீரர்கள் 3 மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

திருப்பூர் மாவட்டத்தில், திருவண்ணாமலை மாவட்ட தொழிலாளர்கள் தங்கியிருந்த தகரக் கொட்டகை வீடுகளில் அடுத்தடுத்து 9 சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதில் 42 வீடுகள் எரிந்து தரைமட்டமானது.

திருப்பூர் கல்லூரி சாலை சிக்கன்னா அரசு கலைக் கல்லூரி எதிரில் எம்ஜிஆர் காலனி பகுதி அமைந்துள்ளது. இங்கு சாயாதேவிஎன்பவர்தனக்கு சொந்தமான இடத்தில் 42 கூரைத்தகரகொட்டகைகள் அமைத்து வாடகைக்கு விட்டிருந்தார். இதில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கட்டிட தொழிலாளர்கள் மற்றும் பனியன் தொழிலாளர்கள் ஏராளமானோர் தங்கள் குடும்பத்துடன் தங்கி பணியாற்றி வந்தனர்.

இந்நிலையில் புதன்கிழமை காலை அனைவரும் வழக்கம் போல வேலைக்கு சென்றுள்ளனர். மதிய நேரத்தில் வீடுகளில் யாரும் இல்லாதபோதுகுறிப்பிட்ட ஒரு வீட்டில் சிலிண்டர் கசிவு ஏற்பட்டுள்ளது. சிலிண்டரிலிருந்து வெளியேறிய வாயு வீடு முழுவதும் நிறைந்திருந்த நிலையில், லேசாக பற்றிய தீப்பொறி பெரும் வெடிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வெடிப்பு பக்கத்து வீடுகளில் இருந்த சிலிண்டர்களையும் தாக்க அடுத்தடுத்து 9 வீடுகளில் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறி பெரும் தீப்பிழம்பை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த பெரும் வெடிப்பு காரணமாக அப்பகுதியிலிருந்த 42 தகர கொட்டகை வீடுகளும் தரைமட்டமானது. இந்த தீ விபத்தில் வீட்டிலிருந்த பொருட்களான கட்டில், பீரோ, எலெக்ட்ரானிக் பொருட்கள், ஆதார் அட்டை, கல்லூரி சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் மற்றும் சிறுக சிறுக சேர்த்து வைத்திருந்த



நகைகள், பணம், 3 இருசக்கர வாகனங்கள் உள்ளிட்டவை எரிந்து சேதமடைந்தன.

இந்த சிலிண்டர் வெடிப்பின் சத்தம் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு கேட்டதாகக் கூறப்படுகிறது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு தீயணைப்பு துறையின் இரண்டு வாகனங்கள் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட தண்ணீர் லாரிகள் உதவியுடன் 30 தீயணைப்பு வீரர்கள் மூன்று மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தகவல் அறிந்து ஏராளமான பொதுமக்கள் சம்பவஇடத்தில்கூடியதால் அவர்களை போலீசார் அருகில் செல்லாதவாறு பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது உடைமைகள் முற்றிலும் எரிந்துசேதம்அடைந்ததால் கதறி அழ துவங்கினர். முதற்கட்டமாக எரிந்துகொண்டிருக்கும் வீடுகளுக்குள் இருந்த பொருள்களை மக்கள் வெளியற்றினர். மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரவு தங்குமிடம் மற்றும் உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# குன்னூரில் தெரு நாய் கடித்து மூதாட்டி படுகாயம்; ஒரு வாரத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்டோரை கடித்துள்ளதால் மக்கள் அச்சம்

குன்னூர் நகரப் பகுதியில் 30 வார்டுகள் உள்ளது இதில் டிடிகே சாலை,வி பி தெரு, எம்ஜிஆர் நகர்,சித்தி விநாயகர் கோவில் தெரு,கன்னி மாரியம்மன் கோவில் தெரு, மவுண்ட் ரோடு, ஓட்டுபட்டறை,மவுண்ட் பிளசண்ட், பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் தெரு நாய்கள் அதிக அளவில் நடமாடி வருகிறது இதில் அவ்வப்போது பொதுமக்களை விரட்டுவதுடன், கடித்து காயப்படுத்தியும் வருகிறது. தெரு நாய்களை கட்டுப்படுத்த வேண்டுமென நகர மன்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் இது தொடர்பாக நக



ராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்காததால் நகர மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்நிலையில் நேற்று மாலை ஓட்டுபட்டறைகாமாட்சி அம்மன்கோவில்அருகே சுற்றித்திரிந்த தெரு நாய்கள் வழியாக சென்ற மேரி என்ற மூதாட்டியை கடித்து குதறியது இதனைப் பார்த்த அக்கம்,பக்கம் உள்ளவர்கள் உடனடியாக வந்து நாயை விரட்டி விட்டுமூதாட்டியை 108 ஆம்புலன்ஸ் மூலம் குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக இப்பகுதி நகர மன்ற உறுப்பினர் ராஜேந்திரன் கூறுகையில்: ஓட்டு பட்டறை பகுதியில் 50க்கும் மேற்பட்ட தெருநாய்கள் சுற்றித் திரிகிறது இவை அவ்வப்போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை துரத்தி சென்று கடித்து வரும் சம்பவம் தொடர் கதையாகவே உள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்டோரை தெரு நாய்கள் பதம் பார்த்துள்ளது. நாய்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நகராட்சி நிர்வாகம் சார்பில் தனி குழு அமைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டன.ஆனால் இது வரை எந்தவிதமான நடவடிக்கை எடுக்காததால் அனைத்து தரப்பு மக்களும் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.எனவே தெரு நாய்களை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
10.7.2025

# தூத்துக்குடி விமான நிலையம் ரூ.380 கோடியில் விரிவாக்கம்: விரைவில் திறப்பு விழா




தென்னகத்தின் தொழில் நகரமாக தூத்துக்குடி உருவாகி உள்ளது. நகரின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக போக்குவரத்து வசதி அமைகிறது. தூத்துக்குடி நகரின் மகுடத்தில் முத்தாக துறைமுகம் அமைந்துள்ளது. தூத்துக்குடியை ரெயில் பாதையும், 4வழிச்சாலையும் தழுவிச்செல்வதால் வாகன போக்குவரத்துக்கும் வசதியாக அமைந்துள்ளது.

அனைத்து போக்குவரத்து வசதியும் கொண்ட நகரமாக தூத்துக்குடி நகரம் திகழ்ந்தால்தான் தொழிற்சாலைகள் பெருகும் என்ற வகையில் தூத்துக்குடி மண்ணிலும் விமானம் நிற்க வேண்டும் என்று அரசு முடிவெடுத்து விமான நிலையத்தை உருவாக்கியது. அதன்படி தூத்துக்குடியை அடுத்த வாகைகுளத்தில் விமான நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த விமான நிலையம் 1992ம் ஆண்டு அப்போதைய முதல்அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. இந்தவிமானநிலையத்தில் 1,350 மீட்டர் நீளம் கொண்ட ரன்வே அமைக்கப்பட்டு உள்ளது. இதில் சிறிய அளவு விமானங்கள் மட்டும் இறங்கும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. 1992ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ம்தேதி தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு முதல் முறையாக வாயுதூத் விமானம் பறந்தது.

ஆனால் இந்த சேவை 14 மாதங்கள் மட்டுமே நீடித்தது. குறித்த நேரத்துக்கு விமானங்கள் வராததால் விமான சேவை நிறுத்தப்பட்டது. அதன்பிறகு 1996ம் ஆண்டு என்.இ.பி.சி. என்னும் தனியார் நிறுவனம் தூத்துக்குடியில் இருந்து விமான சேவையை தொடங்கியது. இந்த நிறுவனம் தூத்துக்குடி கொச்சி சென்னைக்கு விமான சேவையை தொடங்கியது. இதன் மூலம் தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு செல்ல 4½ மணி நேரம் ஆனது. இதனால் இந்த சேவை 6 மாதத்தில் நிறுத்தப்பட்டது. கடந்த 2006ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம்தேதி முதல் தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு ஏர்டெகான் தனியார் விமான சேவை தொடங்கப்பட்டது.

தற்போது இரண்டு தனியார் விமானநிறுவனங்கள் மூலம் சென்னை மற்றும் பெங்களூருக்கு 9 விமான சேவைகள் அளிக்கப்படுகின்றன. இதனை மக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். கடந்த மே மாதம் கோடை விடுமுறையில் சுமார் 13 ஆயிரம் பேர் தூத்துக்குடியில் இருந்து சென்னை, பெங்களூருக்கு சென்றுள்ளனர். சென்னை மற்றும் பெங்களூரில் இருந்து சுமார் 15 ஆயிரம் பேர் தூத்துக்குடிக்கு வந்துள்ளனர்.

இதே போன்று கடந்த மாதம் சுமார் 11 ஆயிரத்து 500 பேர் தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கும், 11 ஆயிரத்து 241 பேர் சென்னை, பெங்களூரில் இருந்து தூத்துக்குடிக்கும் வந்துள்ளனர். நாளுக்கு நாள் விமானசேவையை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தூத்துக்குடி விமான நிலையத்தை விரிவுபடுத்துவது அவசியமாகிவிட்டது.

இதனால் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு ரூ.381 கோடி செலவில் விரிவாக்க பணிகள் மேற்காள்ளப்பட்டன. இதில் 1,350 மீட்டர் விமான ஓடுதளம் 3 ஆயிரம் மீட்டர் நீள ஓடுதளமாக மாற்றப்பட்டு உள்ளது. இதில் ஒரே நேரத்தில் 5விமானங்களைநிறுத்தும் வகையிலும், பல்வேறு வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு திறப்பு விழாவுக்கு தயாராகி உள்ளது.

இதனால் விரிவாக்கம் செய்யப்பட்ட விமான நிலையம் இந்த மாதம் இறுதியில் திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்பிறகு மிகப்பெரிய ஏ321 ரக ஏர்பஸ் விமானங்களும் தூத்துக்குடிக்கு வந்து செல்ல முடியும். இதனால் தூத்துக்குடி சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அமைச்சர் இழுக்கும்போது தேர் சாய்ந்து விபத்து; பக்தர்கள் அதிர்ச்சி



பெரம்பலூர், ஜூலை 10

பெரம்பலூர் அருகே கோவில்பாளையம் கிராமத்தில் ஸ்ரீ அய்யனார் கோவில் தேரோட்டம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்களுடன் அமைச்சர் சிவசங்கர் தேரை வடம்பிடித்து இழுக்கும்போது தேர் சாய்ந்து விபத்துக்குள்ளானது. வடம் பிடித்து இழுத்த தேரின் அச்சு முறிந்து மற்றொரு தேரின் மீது சாய்ந்ததால், நல்வாய்ப்பாகப் பக்தர்கள் காயமின்றி தப்பினர். அமைச்சர் சிவசங்கர் ஏற்பாட்டில், சரிந்த தேரிலிருந்து பொக்லின் உதவியோடு சுவாமி சிலைகளை மீட்டனர். சம்பவத்தின் போது அசம்பாவிதம் ஏதும் நிகழா வண்ணம் அமைச்சர் சிவசங்கர் அந்த இடத்திலிருந்து அதிகாரிகளுடன் ஆலோசித்து உடனே ஸ்ரீ அய்யனார் சிலையை மற்றொரு தேருக்கு இடமாற்றி தேரை இருக்க ஏற்பாடு செய்தார். தொடர்ந்து பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்தனர். கோவில்பாளையம் தேர் நீண்ட நாட்களாக பயன்படுத்தமால் இருந்த பழைய தேர் என்பதால் மரத்தாலான அச்சு பாரம் தாங்காது முறிந்து விட்டதாக அறநிலைதுறை அதிகாரிகள்தரப்பில் தெரிவித்தனர். அமைச்சர் பங்கேற்ற கோயில் விழாவில் தேர் அச்சு முறிந்து பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# பிளஸ்2 மாணவியை தோப்புக்கு அழைத்துச்சென்று பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளி

கன்னியாகுமரி, ஜூலை 10

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகே உள்ள ரீத்தாபுரம் பகுதியை சேர்ந்தவர் தனிஸ் (வயது25), வெல்டிங் தொழிலாளி. இவருக்கு திருமணமாகி மனைவியும், 10 மாதத்தில் ஒரு குழந்தையும் உண்டு. தனிஸ்க்கும் ஒரு பிளஸ்2 மாணவிக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. அந்த மாணவி பள்ளி முடிந்ததும் மாலையில் தட்டச்சு பயிற்சிக்கு செல்லும் போது அவரை தனிஸ் சந்தித்து பழகி வந்தார்.

சம்பவத்தன்று தனிஸ் சிறுமியிடம் குளச்சல் அருகே உள்ள பஸ் நிறுத்தத்திற்கு வருமாறு கூறியுள்ளார். அங்கு வந்த சிறுமியை மோட்டார் சைக்கிளில் ஏற்றி அருகே உள்ள தோப்புக்குஅழைத்துசென்றார். அங்குவைத்துமாணவியை பலாத்காரம்செய்துள்ளார். பின்னர் இதுகுறித்து யாரிடமும் சொல்லக்கூடாது என தனிஸ் மிரட்டி அனுப்பி வைத்தார்.

பின்னர் மாணவியின் நடவடிக்கையில் சிறு சிறு மாற்றம் ஏற்பட்டதை கவனித்த தாயார் அவரிடம், 'ஏன் இப்படி இருக்கிறாய்?' என கேட்ட போது மாணவி தனக்கு நேர்ந்த கொடுமையை கூறினார். இதை கேட்டு அதிர்ச்சி அடைந்த தாயார் குளச்சல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார்செய்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர்தனலெட்சுமி தனிஸ் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்தார். இதற்கிடையே தனிஸ் தலைமறைவானார். அவரை போலீசார் தேடி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (10.7.2025)

மேஷம்: இன்றைய நாள் சிரமமானதாய் போலாம். மனஅழுத்தம் அதிகரிக்க வாய்ப்பு. சாமர்த்தியமாக செயல்படுங்கள்.

ரிஷபம்: நல்ல செய்தி வரும். தொழில் தொடர்பான பயண வாய்ப்பு இருக்கிறது. பணவரவுக்கு தாமதம் ஏற்படலாம்.

மிதுனம்: உதவி செய்வதில் மகிழ்ச்சி. நீண்ட நாட்களாக யோசித்த காரியம் இன்று தொடங்கலாம். குடும்ப சந்தோசம்.

கடகம்: திடீர் செலவுகள் ஏற்படலாம். உறவினர் மூலம் நன்மை உண்டு. எதிலும்பொறுமையாகஇருங்கள்.

சிம்மம்: முக்கிய முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். நண்பர்களிடம் வாக்குவாதம் தவிர்க்கவும். உடல்நலம் காக்கவும்.

கன்னி: தொழில் வளர்ச்சி காணலாம். உறவினர் உதவியால் நன்மை. சிக்கல்கள் தீரும். மனநிம்மதி கிடைக்கும்.

துலாம்: முக்கிய சந்திப்பு ஒன்று இருக்கும். வியாபாரத்தில் லாபம். எதிர்பார்த்த வேலை நிறைவேறும்.

விருச்சிகம்: கஷ்டம் என்று நினைத்தது வசீகரமாக முடியும். புதிய நண்பர்கள் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி.

தனுசு: தவறான முடிவுகள் தவிர்க்க. கடன் குறைவு ஏற்படும். மன உறுதியுடன் செயல்பட வேண்டும்.

மகரம்: உழைப்பிற்கு எதிர்பார்த்த மதிப்பு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி.

கும்பம்: நண்பர்களிடம் நம்பிக்கையுடன் பேசவும். தொழிலில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. உடல்நலம் சீராக இருக்கும்.

மீனம்: இனிய நாளாக அமையும். முயற்சி வெற்றியாகும். புதுமை குறித்த யோசனைகள் பயனளிக்கும்.

# தோட்டத்தில் புகுந்து நாய்கள் கடித்து குதறியதில் 25 ஆடுகள் பலி



தூத்துக்குடி ஜூலை 10

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகேயுள்ள தஞ்சைநகரம் கிராமத்தை சேர்ந்த ராஜபாண்டி மகன் சாமுவேல் (வயது 36). இவர் தனக்கு சொந்தமான தோட்டத்தில் முள்வேலி அமைத்து 25க்கும் மேற்பட்ட ஆடுகளை பராமரித்து வருகிறார். ஆடுகளுக்கு இரவு இரை வைத்து விட்டு மறுநாள் காலையில் தோட்டத்திற்கு வருவது வழக்கம் ஆகும். இந்த நிலையில் கடந்த 5ம்தேதி காலை அவர், தோட்டத்திற்கு சென்றபோது தோட்டத்தில் இருந்து நாய்கள் குரைத்தபடி வெளியேறின.

உள்ளே சென்று பார்த்தபோது தோட்டத்தில் 25 ஆடுகள் இறந்து கிடந்தது தெரியவந்தது. இரவில் நாய்கள் கூட்டம் தோட்டத்தில் புகுந்து ஆடுகளை கடித்து குதறியதில் செத்து மடிந்து இருப்பது தெரியவந்தது. தகவல் அறிந்து சாத்தான்குளம் சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், விஏஓ ஜாஸ்மின்மேரி, கால்நடை மருத்துவர் சவுந்தர், வனத்துறை அலுவலர் சக்திவேல் உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். நாய்கள் கடித்து 25 ஆடுகள் இறந்து விட்டதால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அரசு சார்பில் நிவாரணம் வழங்க வேண்டும் என சாமுவேல், அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# விம்பிள்டன் டென்னிஸ்: அல்காரஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்), பிரிட்டனின் கேமரூன் நோரி உடன் மோதினார்.

இந்த போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கார்லஸ் அல்காரஸ் 62, 63, 63 என்ற நேர் செட் கணக்கில் கேமரூன் நோரியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் கார்லஸ் அல்காரஸ், அமெரிக்கவை சேர்ந்த டெய்லர் பிரிட்ஸ் உடன் மோத உள்ளார்.

# கம்பீர் பற்றி யாரும் எதுவும் சொல்லக்கூடாது.. ஏனெனில்.. யோக்ராஜ் சிங் ஆவேசம்

இங்கிலாந்துக்கு சென்றுள்ள சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் லீட்சில் நடந்த முதலாவது டெஸ்டில் இந்தியா 371 ரன்களை இலக்காக நிர்ணயித்த போதிலும் அதை இங்கிலாந்து அணி கடைசி நாளில் வெற்றிகரமாக விரட்டிப்பிடித்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 336 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இது பர்மிங்காம் மைதானத்தில் இந்திய அணி பெற்ற முதல் டெஸ்ட் வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் இங்கு விளையாடிய 8 டெஸ்டில் ஆடி 7ல் தோல்வியும் ஒன்றில் டிராவும் கண்டிருந்தது. இந்த வெற்றியின் மூலம் அந்த 58 ஆண்டு கால சோகத்திற்கு தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீர் தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இந்திய அணி முற்றுப்புள்ளி வைத்து அசத்தியது. அத்துடன் பர்மிங்காம் மைதானத்தில் வெற்றி பெற்ற முதல் ஆசிய அணி என்ற சாதனையையும் இந்தியா படைத்தது.

முன்னதாக தலைமை பயிற்சியாளரான கம்பீரின் கீழ் இந்திய அணி நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடர்களில் அடுத்தடுத்து தோல்வியை சந்தித்தது. அதனால் அவர் மீது கடும் விமர்சனங்கள் எழுந்தன. மேலும் இந்த இங்கிலாந்து தொடரின் முதல் போட்டியிலும் இந்திய அணி மோசமான தோல்வியை சந்தித்தது. இதன் காரணமாக டெஸ்ட் போட்டிகளுக்கு கம்பீர் செட்டாக மாட்டார் என்று குரல்கள் எழுந்தன.

இருப்பினும் கடந்த காலங்களில் வெற்றியே கண்டிராத பர்மிங்காம் மைதானத்தில் தற்போது அவரது பயிற்சியின் கீழ் இந்திய அணி வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளது. இதன் காரணமாக கம்பீருக்கு ஆதரவு குரல்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் கம்பீர் பற்றி யாரும் எதுவும் சொல்லக்கூடாது என்று இந்திய முன்னாள் வீரரான யோக்ராஜ் சிங் கூறியுள்ளார். ஏனெனில் அவர் மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "இந்திய இளம் வீரர்கள் வளர்ந்து நன்றாக விளையாடுவதை நீங்கள் கவனித்திருக்கலாம். வீரர்களை ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அவரை நீக்குங்கள், அவர் அதற்கு தகுதியானவர் அல்ல என்று அவர்களை ஒருபோதும் சொல்லக்கூடாது.

கவுதம் கம்பீர் பற்றி எதுவும் சொல்லக்கூடாது. அவர் மிகச்சிறப்பாக செயல்படுகிறார். யுவராஜ் சிங், கவுதம் கம்பீர் மற்றும் ராகுல் டிராவிட் ஆகியோர் கிரிக்கெட்டுக்கு திருப்பி தருகிறார்கள், ஏனெனில் கிரிக்கெட் அவர்களுக்கு நிறைய கொடுத்துள்ளது.

எனவே, நாம் அனைவரும் அவர்களை ஆதரிக்க வேண்டும். தொடரை இழந்தால், குறைந்தபட்சம் இந்த குழந்தைகள் (வீரர்கள்) மிகச்சிறப்பாக விளையாடினார்கள் என்று எழுத வேண்டும். ஆனால் தோல்வியை நாம் பொறுத்துக்கொள்ள முடியாது. நீங்கள் தோல்வியடைந்தால் விளக்கம் கொடுக்க வேண்டியதில்லை. நீங்கள் வென்றால் விளக்கம் தேவையில்லை, இது ஒரு எளிய விஷயம்" என்று கூறினார்.

# வங்காளதேசத்துக்கு எதிரான டி20 தொடர்: பாகிஸ்தான் அணி அறிவிப்பு... முன்னணி நட்சத்திர வீரர்களுக்கு இடமில்லை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் டி20 போட்டி வருகிற 20ம் தேதியும், 2வது போட்டி 22ம் தேதியும், 3வது மற்றும் கடைசி டி20 போட்டி 24ம் தேதியும் நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சல்மான்அலி ஆகாதலைமையிலானஅந்தஅணியில் முன்னணி நட்சத்திர வீரர்களான பாபர் அசாம், முகமது ரிஸ்வான் மற்றும் ஷாகீன் அப்ரிடி ஆகியோர் இடம்பெறவில்லை.

பாகிஸ்தான் அணி விவரம் பின்வருமாறு:

சல்மான் அலி ஆகா (கேப்டன்), அப்ரார் அகமது, அகமது டேனியல், பஹீம் அஷ்ரப், பகர் ஜமான், ஹசன் நவாஸ், ஹுசைன் தலாத், குஷ்தில் ஷா, முகமது அப்பாஸ் அப்ரிடி, முகமது ஹாரிஸ், முகமது நவாஸ், சாஹிப்சாதா பர்ஹான், சைம் அயூப், சல்மான் மிர்சா, சுப்யான் மொகிம்.

# அவர் மட்டும் இருந்திருந்தால் நான் கண்டிப்பாக பாட்டு எழுதியிருக்க மாட்டேன் மதன் கார்க்கி





ராம் இயக்கத்தில் மிர்ச்சி சிவா, கிரேஸ் ஆண்டனி உள்ளிட்ட பலர் நடித்துள்ள 'பறந்து போ' திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி வரவேற்பை பெற்றது. இந்தப் படத்தின் வெற்றி விழா கொண்டாட்டம் சென்னையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பேசிய மதன் கார்க்கி கூறியதாவது:

இயக்குநர் ராமுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நிறைய விஷயங்களை ராம் உடைத்தார். முத்துக்குமார் உயிருடன் இருந்து இருந்தால் நான் கண்டிப்பாக இந்த படத்திற்கு பாடல் எழுதியிருக்க மாட்டேன். ஏனென்றால் அவர்களின் நட்பு அவ்வளவு ஆழமான நட்பு. எனவே, இந்த வெற்றியில் அவருக்கும் பங்கு இருக்கிறது. அவரையும் நான் நினைவு கூர்ந்து கொள்கிறேன். இந்த படத்தில், முன்பு துண்டு துண்டாக பார்த்தேன். இப்போது அனைத்தையும் ஒன்று சேர்த்து பார்க்கும் போது சிறப்பாக உள்ளது" என்றார்.

முன்னதாக நடிகர் சிவா பேசும் போது, "வருடத்திற்கு ஒருமுறையாவது இதுபோன்ற ஜாலியான படங்களை ராம் சார் இயக்க வேண்டும் என்பதுதான் கோரிக்கை. படத்திற்காக மலை ஏறியது, வெயிலில் அலைந்தது இதை எல்லாம் தாண்டி மக்கள் நீங்கள் ரசித்து பார்த்ததுதான் மகிழ்ச்சி. ராம் சாரின் அனைத்து உதவி இயக்குநர்களுக்கும் நன்றி. அவரின் உதவி இயக்குநர் ஒருவர் பெயரைத்தான் இந்தப் படத்தில் எனது கதாபாத்திரற்கு பெயராக வைத்தார்" என்றார்.

# எச்.வினோத் இயக்கத்தில் நடிக்கும் தனுஷ்



''சதுரங்க வேட்டை'' படத்தின் மூலம் இயக்குனராக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் எச். வினோத். இவர் இயக்கிய முதல் படமே ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அதை தொடர்ந்து, ''நேர்கொண்ட பார்வை, வலிமை, துணிவு, தீரன் அதிகாரம் ஒன்று'' போன்ற நல்ல படங்களை கொடுத்து சினிமாவில் பிரபலமானார். தற்போது இவர் விஜய்யின் ''ஜனநாயகன்'' படத்தை இயக்கி வருகிறார். இது விஜய்யின் கடைசி படம் என்பதால் மிகப்பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 9ம் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில், ''ஜனநாயகன்'' படத்திற்கு பிறகு எச்.வினோத் இயக்க உள்ள படம் பற்றிய முக்கிய தகவல் ஒன்று வெளியாகி இருக்கிறது. அதன்படி, எச். வினோத் அடுத்ததாக தனுஷை இயக்க போவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை லலித் குமார் தயாரிக்கவுள்ள இப்படத்துக்கு சாம் சி.எஸ் இசையமைக்க உள்ளதாக கூறப்படுகிறது. இதற்கான ஆரம்பகட்ட பணிகள் விரைவில் தொடங்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

# வெற்றிமாறன் தயாரித்துள்ள 'பேட் கேர்ள்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




காக்கா முட்டை, விசாரணை, வட சென்னை உள்ளிட்ட பல விருதுகளை வென்ற படங்களைத் தயாரித்துள்ள இயக்குனர் வெற்றிமாறனின்கிராஸ்ரூட்பிலிம்கம்பெனிதயாரிப்பில்அறிமுக இயக்குனர் வர்ஷா பரத் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'பேட் கேர்ள்'.

இப்படத்தில் அஞ்சலி சிவராமன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவருடன் சாந்தி பிரியா, சரண்யா ரவிச்சந்திரன், ஹ்ரிது ஹரூன், டீஜே, சஷங்க் பொம்மிரெட்டிபல்லி மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்தின் இசையை அமித் திரிவேதி மேற்கொண்டுள்ளார். இப்படம் ஒரு டீனேஜ் பெண் வளர்ந்து வரும் சூழலில் அவளுக்கு ஏற்படும் ஆசைகள், கனவுகள், இச்சைகள் அவள் எப்படி இந்த உலகத்தை பார்க்கிறாள், அனுபவிக்கிறாள் என்பதை பற்றி இப்படம் பேசியுள்ளது. சமீபத்தில் படத்தின் டீசர் வெளியானதில் இருந்து இப்படம் பல சர்ச்சைகளை சந்தித்து வருகிறது. கோவாவில் நடைபெற்ற 54வது சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு விருது வென்றது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், பேட் கேர்ள் படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வருகிற செப்டம்பர் 5ந் தேதி வெளியாகும் என தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.